# மகளிருக்கு ரூ.5000- நாடே திரும்பிப் பார்த்தது! மக்கள் மகிழ்ச்சிக் கடலில் திளைத்தனர்!

## நிதி நிலை அறிக்கை!... 6 ஆம் பக்கத் தொடர்ச்சி

**நெடுஞ்சாலைகள்**

108 சாலை உட்கட்டமைப்பு பொருளாதார வளர்ச்சியின் முதுகெலும்பாக செயல்படுவதுடன். ஒரு நாட்டின் நிலையான வளர்ச்சிக்கும் அடிப்படையாக உள்ளது. இந்த முக்கியத்துவத்தை உணர்ந்து, தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்கள் மற்றும் முன்முயற்சிகள் மூலம் சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டில் சிறப்புக் கவனம் செலுத்தி வருகிறது.

109. கடந்த ஐந்து ஆண்டுகளில், 1085 கி.மீ. நீளமுள்ள சாலைகள் 8,313 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நான்கு வழித்தட சாலைகளாக அகலப்படுத்தும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, அவற்றில் 6,191 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 692 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் விரைவில் நிறைவு பெறும். நடப்பாண்டில், 253 கி.மீ. நீளமுள்ள சாலைகளை 1647 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நான்கு வழித்தட சாலைகளாக அகலப்படுத்துவதற்கான பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன.

## ‘இன்னுயிர் காப்போம்’ திட்டத்தில் 5.11 லட்சம் பேர் பயன்!

110. கடந்த ஐந்து ஆண்டுகளில், 7,517 கி.மீ. நீளமுள்ள ஊராட்சி / ஊராட்சி ஒன்றிய சாலைகள், 7,625 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இதர மாவட்டச் சாலைகளாக தரம் உயர்த்த ஆணையிடப்பட்டு, அவற்றில் 6,213 கி.மீ. நீளமுள்ள சாலைகள் 6,264 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. நடப்பாண்டில், 1057 கி.மீ. நீளமுள்ள சாலைகள் 1000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தரம் உயர்த்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

111. கடந்த ஐந்து ஆண்டுகளில் 1268 தரைப்பாலங்களை உயர்மட்டப் பாலங்களாக அமைப்பதற்கான பணிகள் 2635 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டன. இது வரை, 1168 தரைப்பாலங்கள் உயர்மட்டப் பாலங்களாக 2064 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு, மக்கள் பயன்பாட்டிற்கு வந்துள்ளன. மேலும், கடந்த ஐந்து ஆண்டுகளில் 1342 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 42 உயர் மட்டப் பாலங்களும், 2,184 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 46 இரயில்வே மேம்பாலங்களும், 2,388 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 30 புறவழிச்சாலை பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.




112. முக்கிய நகரங்களில் வாகன நெரிசலைக் குறைக்க பல்வேறு உயர்மட்டச் சாலைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. அண்மையில் கோயம்புத்தூர் மாநகரில், 1791 கோடி ரூபாய் மதிப்பிலான 10:1 கி.மீ. நீளமுடைய ஜி.டிநாயுடு உயர்மட்டச் சாலை மற்றும் 393 கோடி ரூபாய் மதிப்பிலான 2.4 கி.மீ. நீளமுடைய சி.சுப்பிரமணியம் மேம்பாலம் ஆகியவை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டன. மேலும், மதுரை மாநகரில், 150 கோடி ரூபாய் மதிப்பிலான 1.2 கி.மீ. நீளமுள்ள வீரமங்கை வேலுநாச்சியார் நான்குவழி மேம்பாலம் மற்றும் 61 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மத்திய கைலாஷ் சந்திப்பில் சாலை மேம்பாலம் ஆகியவை முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டன. சென்னையில், தேனாம்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரை 621 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான உயர்மட்டச் சாலை. 45 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மடிப்பாக்கத்தில் வாகன சுரங்கப் பாதை மற்றும் மதுரை கோரிப்பாளையத்தில் 199 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சாலை மேம்பாலப் பணிகளும் நடைபெற்று வருகின்றன. இந்த இடைக்கால வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறைக்கு 21,132 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மெட்ரோ இரயில் திட்டங்கள்**

113. மூன்று வழித்தடங்களில், 63,246 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 118.9 கி.மீ. தூரத்திற்கான சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகள் விரைந்து நடைபெற்று வருகின்றன. இரண்டாம் கட்ட மெட்ரோ இரயில் திட்டத்தின் முதல் பகுதியை இயக்குவதற்கான ஒழுங்குமுறை அனுமதி இரயில்வே வாரியத்திடமிருந்து விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது. பூந்தமல்லி புறவழிச்சாலை முதல் போரூர் வரையிலான மெட்ரோ இரயில் வழித்தடம், வடபழனியில் தற்போதுள்ள மெட்ரோ வழித்தடத்துடன் இணைக்கப்பட உள்ளது. 11 மெட்ரோ நிலையங்களைக் கொண்ட 14.6 கி.மீ. நீளமுள்ள இவ்வழித்தடம் விரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு வரும்.

**114. கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாநகரங்களில் மெட்ரோ இரயில் திட்டங்களை நிறைவேற்ற, அவற்றிற்கான விரிவான திட்ட அறிக்கைகளுக்கு ஒப்புதல் கோரப்பட்டபோது, அவற்றிற்கு ஒப்புதல் அளிக்காமல், அவற்றை ஒன்றிய அரசு திருப்பி அனுப்பியுள்ளது. கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாநகரங்களில் 20 இலட்சத்திற்கும் குறைவான மக்கள்தொகையே உள்ளதாகக் குறிப்பிட்டு, இத்திட்ட அறிக்கைகளுக்கு ஒப்புதல் அளிக்கப்படவில்லை என ஒன்றிய அரசு விளக்கம் அளித்துள்ளது. இந்நகரங்களுக்கு இணையான நாட்டின் பிற நகரங்களுக்கு அளிக்கப்பட்ட ஒப்புதலைப் போன்றே, கோயம்புத்தூர் மற்றும் மதுரை மெட்ரோ இரயில் திட்டங்களையும் மறுபரிசீலனை செய்து, ஒன்றிய அரசு ஒப்புதல் வழங்கிட தமிழ்நாடு அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.**

115. சென்னை விமான நிலையம் முதல் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம் அமைந்துள்ள கிளாம்பாக்கம் வரையிலும், கோயம்பேடு முதல் பட்டாபிராம் வழியாக ஆவடி வரையிலும், திருப்பெரும்புதூர் வழியாக பூந்தமல்லி முதல் சுங்குவார்சத்திரம் வரையிலுமான புதிய வழித்தடங்களில் மெட்ரோ இரயில் திட்டங்களை நிறைவேற்றிட மாநில அரசு கொள்கை ரீதியிலான ஒப்புதல் வழங்கி, ஒன்றிய அரசின் ஒப்புதல் மற்றும் நிதியுதவிக்கு பரிந்துரைத்துள்ளது. ஒன்றிய அரசின் ஒப்புதல் மற்றும் நிதியுதவியை எதிர்நோக்கி, மேற்காணும் திட்டங்களுக்கான நிலம் கையகப்படுத்துதல், பயன்பாட்டு அமைப்புகளை மாற்றியமைத்தல் போன்ற ஆரம்ப கட்டப் பணிகளை மேற்கொள்வதற்கான நிர்வாக ஒப்புதலையும் மாநில அரசு வழங்கியுள்ளது.

116. சென்னையின் பிராட்வே பேருந்து நிலையம் அமைந்துள்ள பகுதியில் ஒருங்கிணைந்த பன்முகப் போக்குவரத்து வசதிகள் கொண்ட பேருந்து நிலையம், நவீன வசதிகளுடன் அலுவலக வளாகம் மற்றும் குறளகம் மறுமேம்பாடு ஆகியவற்றுக்கான கட்டுமானப் பணிகள் 823 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தற்போது நடைபெற்று வருகின்றன.

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்**

117. “All men are created equal is the greatest fundamental principle upon which our free institutions rest”

– Abraham Lincoln

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் எனும் வள்ளுவரின் வாக்கை சிந்தையில் தாங்கி, விளிம்புநிலை மக்களுக்கான நலத் திட்டங்களை தமிழ்நாடு அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது.

118. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளில் உட்கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்காக, 1,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் **‘அயோத்திதாசப் பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்’** கீழ் 5,281 உட்கட்டமைப்புப் பணிகள் 482 கோடி ரூபாய் செலவில் முடிக்கப்பட்டுள்ளன. 120 கிராம அறிவுசார் மையங்களும் 117 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றன. பழங்குடியின மக்களின் குடியிருப்புகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக 1000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் **‘தொல்குடி’** திட்டத்தின் கீழ் இதுவரை 908 அடிப்படை உட்கட்டமைப்புப் பணிகள் மற்றும் 6,685 பழங்குடியினர் வீடுகளின் கட்டுமானப் பணிகள் 450 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த இடைக்கால வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில் இத்திட்டங்களைச் செயல்படுத்திட. முறையே 300 கோடி ரூபாய் மற்றும் 255 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

119. மாணவர்களுக்கான நவீன விடுதிகள் மூலம் பாதுகாப்பான கற்றல் சூழலை நமது அரசு உருவாக்கி வருகிறது. சென்னையில் உள்ள எம்.சி.இராஜா கல்லூரி விடுதியானது 44 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1 இலட்சம் சதுரஅடி பரப்பளவில் 121 அறைகளுடன் 484 மாணவர்கள் தங்கி கல்வி பயிலும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு உலகளாவிய கல்வி வாய்ப்புகளை அளித்திட இந்த அரசு உறுதிபூண்டுள்ளது. கலை மற்றும் அறிவியல், வணிகம், சட்டம், பொறியியல், மருத்துவம் போன்ற துறைகளில் முதுநிலை அல்லது ஆராய்ச்சிப் படிப்புகளைத் தொடரும் மாணவர்களின் நிதிச் சுமையைக் குறைத்து, திறமையான மாணவர்கள் உலகப்புகழ் பெற்ற கல்வி நிறுவனங்களில் கல்வி கற்கும் வாய்ப்பை வழங்க தொடங்கப்பட்ட, **‘அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வித் திட்டத்தின்’** கீழ், இதுவரை 160 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 385 மாணவர்கள் பயன்பெற்றுள்ளனர்.

120. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரை தொழில்முனைவோராக உயர்த்துவதற்கு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான **‘முதலமைச்சரின் சமூகப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டம்’** (CM ARISE) செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், இதுவரை 440 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களுக்கு 165 கோடி ரூபாய் மானியமாக வழங்கப்பட்டு, இதுவரை 8,639 பயனாளிகள் பயனடைந்துள்ளனர். **‘அண்ணல் அம்பேத்கர் தொழில்கள் முன்னோடிகள் திட்டத்தின்’** கீழ் 4,948 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் தொழில்முனைவோருக்கு 420 கோடி ரூபாய் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

121. தூய்மைப் பணியில் ஈடுபடுவோருக்கு 23 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1,112 வீடுகள் இதுவரை வழங்கப்பட்டுள்ளதுடன், மேலும் 30,000 வீடுகள் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தூய்மைப் பணியில் ஈடுபட்டு வரும் பணியாளர்களை தொழில்முனைவோராக மாற்றிடும் நோக்கில் செயல்படுத்தப்படும் மானியத்துடன் கூடிய சுயதொழில் திட்டத்தின் கீழ், இதுவரை 10 கோடி ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே முதன்முறையாக. தமிழ்நாட்டில் 214 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1,29,689 தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு வழங்கும் திட்டம் முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்டுள்ளது. இந்த இடைக்கால வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைக்கு 3,934 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பிற்படுத்தப்பட்டோர். மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன்**

122. சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள மக்களின் உரிமைகளை நிலைநாட்டவும், சமூகநீதியைத் தொடர்ந்து பேணிக் காத்திடவும், பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின வகுப்பினரின் கல்வி சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியினை ஊக்குவிக்கவும். அரசு பல்வேறு நலத்திட்டங்களைத் தொடர்ந்து வெற்றிகரமாக செயல்படுத்தி வருகிறது.

## திருச்சி, மதுரை, ஓசூரில் புதிய டைடல் பூங்காக்கள்!

123. கடந்த ஐந்து ஆண்டுகளில் 29.67.945 பிற்படுத்தப்பட்டோர். மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கு, பள்ளிப்படிப்பு மற்றும் பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகையாக 1317 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. மேலும், 19,04,868 மாணவர்களுக்கு 919 கோடி ரூபாய் மதிப்பிலான மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம், அம்மாணவர்கள் தொடர்ந்து கல்வி பயில்வது உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும், மாணவர்களுக்கு கல்வி கற்பதில் பாதுகாப்பான கட்டமைப்பை உருவாக்க, கடந்த ஐந்து ஆண்டுகளில் 31 சமூகநீதி விடுதிகள் கட்டுவதற்கு 206 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

124. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் பல்வேறு கடன் திட்டங்களின் கீழ், கடந்த ஐந்து ஆண்டுகளில் 497 கோடி ரூபாய் 69.391 பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த பயனாளிகளுக்குக் குறைந்த வட்டி விகிதத்தில் கடன் உதவியாக வழங்கப்பட்டுள்ளது.

125. இந்த இடைக்கால வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவர்கள் கல்வி உதவித்தொகை வழங்குவதற்காக 460 கோடி ரூபாயும், மாணவர் விடுதிகளின் அடிப்படை வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளுக்காக 78 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

**சிறுபான்மையினர் நலன்**

126. கடந்த ஐந்து ஆண்டுகளில் 90,773 சிறுபான்மையின மாணவர்கள் கல்வி உதவித்தொகை பெற்று பயனடைந்துள்ளனர். தொன்மையான பள்ளி வாசல்கள் மற்றும் தர்காக்கள் 58 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், பழமையான தேவாலயங்கள் 25 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் புனரமைக்கப்பட்டுள்ளன. இந்த இடைக்கால வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில், சிறுபான்மையின மாணவர்கள் கல்வி உதவித்தொகை வழங்குவதற்காக 16 கோடி ரூபாயும், தேவாலயங்கள் மற்றும் பள்ளிவாசல்களின் புனரமைப்பிற்காக 20 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

127. கடந்த ஐந்து ஆண்டுகளில், உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் மூலம் 2,597 பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. அண்மையில் உலமாக்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர ஓய்வூதியத் தொகை 3,000 ரூபாயில் இருந்து 5,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளதுடன், கடந்த ஐந்தாண்டுகளில் உலமாக்களின் ஓய்வூதியத்திற்காக 270 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. மேலும், ஹஜ் புனித யாத்திரை மேற்கொள்ளும் பயணிகளின் வசதிக்காக 39 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னையில் ஹஜ் இல்லம் கட்டும் பணிக்கு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டியுள்ளார். இந்த இடைக்கால வரவு - செலவுத் திட்ட மதிப்பீடுகளில் பிற்படுத்தப்பட்டோர். மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறைக்கு 1634 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.




**இந்து சமய அறநிலையத் துறை**

128. கடந்த ஐந்து ஆண்டுகளில் 12,931 திருக்கோவில்களில், 8,100 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு, 4.180 திருக்கோவில்களில் திருக்குடமுழுக்குகள் நடத்தப்பட்டுள்ளன. ஆயிரம் ஆண்டுகள் பழமையான திருக்கோவில்களைப் புனரமைத்துப் பாதுகாத்திடும் வகையில் கடந்த நான்காண்டுகளில் அரசு நிதி 425 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு. இதுவரை 84 திருக்கோவில்களில் திருக்குடமுழுக்குகள் நிறைவு பெற்றுள்ளன. மேலும், ஒருங்கிணைந்த பெருந்திட்ட வரைவின் கீழ் (Master Plan) திருச்செந்தூர், சமயபுரம். பழனி உள்ளிட்ட 19 முக்கிய திருக்கோவில்களில் 1,770 கோடி ரூபாய் மதிப்பீட்டில், திருப்பணிகள் மற்றும் அடிப்படை வசதிகள் நடைபெற்று வருகின்றன.

129. இந்த அரசு பொறுப்பேற்ற பின் எடுக்கப்பட்ட தொடர்முயற்சிகள் காரணமாக, 1048 திருக்கோவில்களுக்குச் சொந்தமான 8,363 கோடி ரூபாய் மதிப்பிலான 8.111 ஏக்கர் நிலங்கள் ஆக்கிரமிப்பாளர்களின் பிடியிலிருந்து மீட்கப்பட்டுள்ளன. இந்த அரசு பொறுப்பேற்ற பின், நவீன நில அளவைக் கருவிகள் மூலம் 2,34,715 ஏக்கர் திருக்கோவில் நிலங்கள் அளவீடு செய்யப்பட்டு திருக்கோவில் சொத்துகள் பாதுகாக்கப்பட்டுள்ளன.

130. போதிய நிதிவசதி இல்லாத 19,000 திருக்கோவில்களுக்கு வைப்பு நிதி ஏற்படுத்தப்பட்டு, ஒரு கால பூசைகள் நடைபெற்று வருகின்றன. இதுவரை, இத்திட்டத்திற்கு 335 கோடி ரூபாய் அரசு நிதியாக வழங்கப்பட்டுள்ளது. திருக்கோவில் அர்ச்சகர்களுக்கு முதன்முறையாக மாதந்தோறும் 1,500 ரூபாய் ஊக்கத்தொகையாக வழங்கப்பட்டு வருவதோடு, அவர்களின் குழந்தைகளின் உயர்கல்விக்காக, இதுவரை 1500 மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித்தொகையாக தலா 10,000 ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. திருக்கோவில் அர்ச்சகர்கள் மற்றும் பணியாளர்களுக்கான மாதாந்திர ஓய்வூதியம் 5,000 ரூபாயாகவும், மாதாந்திர குடும்ப ஓய்வூதியம் 2,500 ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்படுவதுடன், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு குடும்பநலநிதி நான்கு இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

131. தஞ்சை மாவட்டம், கும்பகோணம், துக்காச்சி அருள்மிகு ஆபத்சகாயேஸ்வரர் திருக்கோயிலுக்கு மரபுசார்ந்த கட்டடக் கலையினை பாதுகாக்கும் பொருட்டு, நவீன அறிவியல் உதவியுடன் பழமை மாறாமல் திருக்கோயிலை புனரமைத்ததற்காக, கலாச்சார பாரம்பரிய யுனெஸ்கோ ஆசியா - பசிபிக் விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஒன்றிய நிதிப்பகிர்வு முறையில் மாற்றம் தேவை!

**சுற்றுலா**

132. 2024 ஆம் ஆண்டில் 30.68 கோடி உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் மற்றும் 11.61 இலட்சம் பன்னாட்டுப் பயணிகள் வருகை என மொத்தம் 30.79 கோடி எண்ணிக்கையுடன், சுற்றுலாத் துறையில், நாட்டிலேயே தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் உள்ளது.

133. பொருளாதார வளர்ச்சியில் சுற்றுலாத் துறை அளிக்கக்கூடிய பெரும் பங்களிப்பை நன்கு உணர்ந்துள்ள இந்த அரசு. இத்துறையில் தனியார் துறை முதலீடுகளை ஈர்த்திடவும். வேலைவாய்ப்புகளைப் பெருக்கிடவும், **‘புதிய சுற்றுலாக் கொள்கையை’** வெளியிட்டது. அண்மையில் மாமல்லபுரத்தில் நடைபெற்ற உலகளாவிய சுற்றுலா மாநாட்டில் 22,794 கோடி ரூபாய் முதலீடு செய்திட 127 முன்னணி நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு. தமிழ்நாடு மருத்துவ மதிப்புப் பயண உச்சி மாநாடு, இந்த அரசின் பங்களிப்புடன் வெற்றிகரமாக நடைபெற்றது. தமிழ்நாட்டில் அதிகம் அறியப்படாத 22 சுற்றுலாத் தலங்களை மேம்படுத்த 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

134. மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள புராதன நகரமான பூம்புகார் 24 கோடி ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்டுள்ளது. மாமல்லபுரத்திற்கு வருகின்ற சுற்றுலா பயணிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்த, முதன்முதலாக மாமல்லபுரத்தில் **‘சிறப்புப் பகுதி மேம்பாட்டு ஆணையம்’** அமைத்து, அதன் மூலமாக, 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில், நவீன சுற்றுலா உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார். இதற்கான நடவடிக்கைகள் விரைவில் தொடங்கப்படும். கன்னியாகுமரியில் கடற்கரை முகப்புப் பகுதி மேம்பாட்டுப் பணிகளை சிறப்பாக மேற்கொண்டதற்காகவும், நீலகிரி மாவட்டம் - உல்லாடா. கோயம்புத்தூர் மாவட்டம் - வேட்டைக்காரன்புதூர் ஆகியவை சிறந்த சுற்றுலா கிராமங்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்காகவும், ஒன்றிய அரசின் விருதுகள் 2023 ஆம் ஆண்டில் பெறப்பட்டுள்ளன. கன்னியாகுமரியில் அய்யன் திருவள்ளுவரின் சிலை மற்றும் விவேகானந்தர் பாறை ஆகியவற்றை இணைக்கும் கண்ணாடி இழைப் பாலத்தினை கடந்த ஆண்டு நமது முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார். சுற்றுலாப் பயணிகளிடையே பெரும் வரவேற்பைப் பெற்ற இக்கண்ணாடி இழைப் பாலத்தினால் கடந்த ஆண்டில் மட்டும் சுற்றுலாப் பயணிகளின் வருகை 43 சதவீதம் அதிகரித்துள்ளது. இந்த இடைக்கால வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில் சுற்றுலாத் துறைக்கு 1,394 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**உணவுப் பாதுகாப்பு**

135. பொருளாதார, சமூக வேறுபாடு இன்றி, மக்கள் அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்திட வேண்டும் என்பதே இந்த அரசின் தலையாய நோக்கமாகும். அதை நிறைவேற்றும் வகையில், தமிழ்நாட்டின் அனைவருக்குமான பொது விநியோகத் திட்டம் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில், வரலாறு காணாத வகையில், நடப்பு குறுவை பருவத்தில், இதுவரை 14.89 இலட்சம் மெட்ரிக் டன்னும், கடந்த ஐந்தாண்டுகளில் 2,15,39,333 மெட்ரிக் டன்னும் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

136. இந்த அரசு பொறுப்பேற்றவுடன் உறுதியளித்தபடி, கூட்டுறவுத் துறையின் மூலம் 12,359 கோடி ரூபாய் பயிர்க்கடனும், 4,889 கோடி ரூபாய் நகைக்கடனும் மற்றும் சுயஉதவிக்குழுக்களின் கடன் 2,118 கோடி ரூபாயும் தள்ளுபடி செய்யப்பட்டன. கடந்த ஐந்தாண்டு காலத்தில், 69,087 கோடி ரூபாய் அளவிற்கு விவசாயிகளுக்கு பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது. மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கான கடன் உச்சவரம்பு 30 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டு, கடந்த ஐந்தாண்டுகளில், 2,52,246 சுயஉதவிக் குழுக்களுக்கு 16,648 கோடி ரூபாய் கடன் கூட்டுறவு வங்கிகளின் மூலம் வழங்கப்பட்டுள்ளது. பொதுமக்களுக்குத் தரமான மருந்துகளை குறைந்த விலையில் வழங்கும் நோக்கில், **‘முதல்வர் மருந்தகம்’** திட்டம் தொடங்கப்பட்டு, இதுவரை 26 கோடி ரூபாய் மதிப்பிலான மருந்துகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம், 45 இலட்சம் பொதுமக்கள் பயனடைந்துள்ளனர். இந்த இடைக்கால வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில் உணவு மானியத்திற்காக 14,000 கோடி ரூபாய் உட்பட, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறைக்கு 17,068 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**கால்நடை பராமரிப்பு**

137. நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்திகள் மூலம் தொலைதூரப் பகுதிகளில் உள்ள விவசாயிகளின் கால்நடைகளுக்கு சிறப்பான கால்நடை மருத்துவச் சேவை வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை, 57 கோடி ரூபாய் செலவில் 2,20,126 கிராம முகாம்களில் 45 இலட்சம் கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. கைவிடப்பட்ட மற்றும் அவதியுறும் கால்நடைகளின் உணவுத் தேவை,

தொடர்ச்சி 8ஆம் பக்கம்

# உள்ளாட்சிகளில் மாற்றுத்திறனாளிகளின் குரல்!